## மனைக்காக வாங்கிய நிலத்தில் மனம் குளிரும் விவசாயம்..!

25.02.2013



**ரியல் எஸ்டேட் அதிபரின் ஜீரோ பட்ஜெட் சிலாகிப்பு**

ரியல் எஸ்டேட் செய்து கொண்டிருந்த நான், இன்றைக்கு விவசாயத்தில் வெளுத்துக் கட்டி, விருது வாங்கும் அளவிற்கு உயர்ந்திருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் ' பசுமை விகடன் தான். இதன் மூலமாகத்தான் இயற்கை விவசாயத்தைப் பற்றி தெரிந்து கொண்டு, இயற்கை இடுபொருட்களைத் தயார் செய்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். என்னை மாதிரியே பயன் பெற வேண்டும் என்று அனைவரையும் 'பசுமை விகடன்' படிக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்று சிலாகிக்கிறார், திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த தெய்வசிகாமணி என்கிற இறையழகன். 'கரிம வேளாண் கூட்டமைப்பு' என்கிற நிறுவனம் இயற்கை விவசாயத்தில் இறையழகனுக்குள் உள்ள ஆர்வம் மற்றும் செயல்பாட்டிற்காக 'இயற்கை வேளாண் வித்தகர் விருது' கொடுத்து கௌரவித்துள்ளது.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரம் அருகே உள்ள பூஞ்சேரி கூட்டுரோடிலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் புதிய இடையூர் என்கிற கிராமத்தில் இருக்கிறது, தெய்வசிகாமணியின் 25 ஏக்கர் பண்ணை, நடவுக்குத் தயாராகி கொண்டிருக்கும் வயல், அறுவடை செய்யப்பட்ட நெல்வயல், மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை.. என அடர்ந்து காணப்படுகிறது, அந்த இயற்கைப் பண்ணை. "டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துவிட்டு, நிறைய இடங்களில் வேலை செய்தேன். ஆனால்... மனதிற்கு திருப்தியே இல்லை. அதன்பிறகு ரியல் எஸ்டேட் தொழிலை செய்து கொண்டிருந்தேன். 12 வருடத்திற்கு முன், வீட்டுமனைப் பிரிவுக்காகத்தான் இந்த நிலத்தை வாங்கினேன். இறைக் குருவனார் என்ற நண்பர், இந்த நிலத்தைப் பார்த்துவிட்டு, இதில் விவசயாம் செய்தால் நன்றாக வரும் என்று சொன்னதோடு, சில விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தார். அதனால், அப்பாவோடு சேர்ந்து விவசாயத்தை ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் ரசாயன விவசாயம்தான். 6 வருடத்திற்கு முன், பசுமை விகடன் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. உடனே இயற்கை விவசாயத்தில் ஆர்வம் வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக. ரசாயன விஷயங்களை

குறைக்க ஆரம்பித்த நான்.. ஜீவாமிர்தம், மீன் அமிலம் என்று தயார் செய்து பயன்படுத்த ஆரம்பித்தேன். நிலத்தில் மண்புழுக்கள் பெருகி, நல்ல மகசூலும் கிடைத்தது. இப்போது, நிலம் நல்ல பக்குவத்திற்கு வந்துவிட்டது. இன்னும் 3 வருடத்திற்கு பிறகு எந்த ஊட்டமும் கொடுக்கத் தேவையில்லை. அந்த அளவுக்கு மண் வளாமாகிவிட்டது என்றார்.

**ஆண்டுக்கு ரூ.13 லட்சம்!**

இந்தப் பண்ணைக்கு 'தமிழ்ப் பண்ணை என்று பெயர் வைத்திருக்கிறேன். 14 ஏக்கரில், அல்போன்சா, பங்கனப்பள்ளி, கொய்யா, (லக்னோ – 49). சப்போட்டா, காட்டுநெல்லி, தென்னை, எலுமிச்சை, குமிழ், மகோகனி, மலைவேம்பு, செம்மரம் என்று மொத்தம் 1,300 மரங்கள் இருக்கிறது. இதற்கெல்லாம் 3 வயதாகிறது. குழி, செடி, நடவு, பராமரிப்பு என்று இதுவரைக்கும் 5 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. இன்னும் இரண்டு வருடத்திற்கு 4 லட்ச ரூபாய் வரைக்கும் செலவாகும் என்று நினைக்கிறேன். அதன் பிறகு, வருமானம் கிடைக்க ஆரம்பித்துவிடும். சராசரியாக ஒரு மரத்திற்கு குறைந்தது ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், வருடத்திற்கு 13 லட்ச ரூபாய் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறேன் என்றார்.

**முழு ஜீரோ பட்ஜெட்!**

நிலத்திற்கும் தேவையான மீன் அமினோ அமிலம், ஜீவாமிர்தம், மூலிகைப் பூச்சி விரட்டி எல்லாவற்றையும் பண்ணையிலேயே தயார் செய்கிறோம். அதற்காக, 6 நாட்டு மாடுகள் இருக்கிறது. என் நிலத்தில் விளையும் உளுந்தைத்தான் ஜீவாமிர்தம் தயாரிக்கப் பயன்படுத்துகிறேன். வெல்லம் மட்டும்தான் வெளியில் வாங்க வேண்டி வரும். பனம்பழம் கிடைக்கும்போது... வெல்லத்திற்கு பதிலாக அதைப் பயன்படுத்திக்கொள்வேன். திருக்கழுக்குன்றம் மீன் மார்க்கெட்டில் இலவசமாக மீன் கழிவுகள் கிடைக்கிறது. அதில்தான் மீன் அமினோ அமிலம் தயார் செய்கிறேன். பயன்படுத்தியது போக மீதி இருக்கும் ஜீவாமிர்தம், மீன் அமிலம் எலலாவற்றையும் அக்கம் பக்கத்து விவசாயிகளுக்கு விலைக்குக் கொடுத்துவிடுவேன். அதன் மூலமாகவும் ஒரு வருமானம் கிடைக்கிறது.
நான்கே கால் ஏக்கரில் நெல் சாகுபடி செய்கிறேன். நான் வழக்கமாக வெள்ளைப் பொன்னிதான் நடவு செய்வேன். இந்த முறை உளுந்தூர் பேட்டை சாரதா ஆஸ்ரமத்திலிருந்து சேலம் சம்பா ரக விதை நெல்லை வாங்கி கொண்டு வந்து, 3 ஏக்கரில் ஒற்றை நாற்று முறையில் நடவு செய்தேன். ஒன்றே கால் ஏக்கரில் வெள்ளைப் பொன்னியையும் நடவு செய்தேன். இரண்டையுமே இப்போது அறுவடை செய்துவிட்டோம். சாதாரணமாக, சேலம் சம்பா விளைவதற்கு 170 நாள் ஆகும் என்று சொல்வார்கள். ஆனால், எங்கள் மண்ணில் 132 நாளிலேயே அறுவடைக்குத் தயாராகிவிட்டது. ஒரு கதிரில், 370 நெல்மணிகள் இருந்தது என்றார். வெள்ளைப்பொன்னி ஒன்றே கால் ஏக்கருக்கு 32 மூட்டை (80 கிலோ) அறுவடையானது. அதை மெஷினில் அரைத்து, 10 கிலோ பைகளில் போட்ட போது.. 145 பைகள் வந்தது. 1 கிலோ 50 ரூபாய் வீதம், 145 பைகளுக்கு 72,500 ரூபாய் வருமானம் கிடைத்தது. 3 ஏக்கரில் விளைந்த சேலம் சமபா 75 மூட்டைகள் (80 கிலோ)

கிடைத்தது. அரைத்து, 10 கிலோ பைகளில் போட்டப் போது 350 பைகள் கிடைத்தது. கிலோ 55 ரூபாய் வீதம், 350 பைகளுக்கு 1 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாய் கிடைத்தது. மொத்தம் நான்கே கால் ஏக்கரில் இரண்டு ரக நெல் மூலமாக 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. நடவு, அறுவடை,அரவைக் கூலி, பையில் போட்டது என்று 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவு போக, 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் லாபமாக கையில நிற்கிறது.

**தொடர்புக்கு**

தெய்வசிகாமணி, செல்போன் : 93400 – 47779

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.02.13** www.vikatan.com